# உனது கருணை

ராகம்: சிவ ரஞ்ஜனி தாளம்: ரூபகம்
இயற்றியவர்: தங்கம் பரமேஸ்வரன்

## பல்லவி

உனது கருணை இன்றி உலகம்
உய்யும் வழி உண்டோ
கனக சபையில் ஆடும் அரனின்
ஆரமுதே அம்பிகையே

## அனுபல்லவி

எனது மனந்தனில் அமர்ந்து
அறிவுரைகள் பல மொழிந்து
காக்கும் தெய்வம் நீயன்றோ
சம்பு மனோஹரி சங்கரி
சிவகாம சுந்தரி

## சரணம்

பாலனுக்கன்றொரு நாள்
பாலமுதம் தந்த அன்னையே
ஞான மார்க பந்துவாய்
துணையாய் நின்றனையே

கோப தாபங்ளை அகற்றும்
அன்பு பண்பு அவை வளர்க்கும்
இதய நிலை தாராயோ

கற்பகவல்லி காமாக்ஷி
மரகதவல்லி மீனாக்ஷி

©Copyright 2001-2015, Thangam Parameswaran, Orleans Ontario Canada